


**கேட்டு புரிந்துக்கொள்ளுதல்:** கேள் மற்றும் கேட்பதை புரிந்துக்கொள்..

- செவித்திறன் பயிற்சி பற்றிய மேலும் விவரங்களுக்கு செவித்திறன் நிபுணரை அணுகவும்.
- உங்களுடைய குழந்தைக்கு செவித்திறன் பயிற்சியை வீட்டிலினும் கட்டாயமாக அளிக்க வேண்டும்.
- உங்களுடைய குழந்தையின் கேட்கும் திறனை தினசரி தேவைக்காக பயன்படுத்துவதை ஊக்கப்படுத்த வேண்டும்.
- உங்களுடைய கேள்விகளுக்கும், கருத்துகளுக்கும் அல்லது உதவிக்கும் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி,

**கேள் உணர்வு இயல் (ஆடியோலஜி) துறை**
அனைத்திந்திய பேச்சு மற்றும் செவித்திறனுக்கான நிறுவனம்
மானசகங்கோத்ரி, மைசூர் - 570 006.
தொலைபேசி எண்: (0821) - 2514449, 2514618, 2515805
இலவச தொலைபேசி எண்: 18004255218
மின்னஞ்சல்: director@aiishmysore.in
வேலை நேரம்: காலை 9.00 முதல் மாலை 5.30 (திங்கள் முதல் வெள்ளி வரை)
(மத்திய அரசு விடுமுறை நாட்களை தவிர)
*Developed by Prof. Asha Yathiraj & Ms. Chandni Jain*
*Designed by the Department of Material Development/2013*
*Translated by: Ms. R. Rajalakshmi , Ms. N Devi & Mr. Saravanan P*

# செவித்திறன் பயிற்சி ஓர் கண்ணோட்டம்



**அனைவருக்கும் தகவல் பரிமாற்றும் திறமையை மேம்படுத்துவோம்**

**அனைத்திந்திய பேச்சு மற்றும் செவித்திறனுக்கான நிறுவனம்**
**மானசகங்கோத்ரி**
**மைசூர் - 570 006.**

செவிப்புலன் இழப்பு கொண்ட குழந்தைகளின் கேட்கும் திறனை வளர்ச்சிபடுத்த செவித்திறன் பயிற்சி உதவுகிறது. செவித்திறன் கருவியை அல்லது காதின் வால் நரம்பு பதியம் (ஹியரிங் எய்ட்/ காக்ளியார் இம்ப்லான்ட்) இளமை பருவத்திலிருந்தே பயன்படுத்தும் குழந்தைகளுக்கே செவித்திறன் பயிற்சி அளிக்க வேண்டும். பேச்சினை ஓரளவுக்கு புரிந்துக்கொள்ளும் சக்தி உடைய குழந்தைகளுக்கே செவித்திறன் பயிற்சி அறிவுறுத்தப்படுகிறது.

செவிப்புலன் இழப்பு உள்ள குழந்தைகளுக்கு செவித்திறன் பயிற்சி கீழ்கண்டவாறு பயன்படுகிறது:

- ஒலியின் கவனத்தை அதிகப்படுத்த பயன்படுகிறது.
- பேச்சினை பயன்படுத்தி பிறருடன் தகவலை பரிமாற்ற உதவுகிறது.
- பள்ளியில் சிறப்பாக செயல்பட உதவுகிறது.
- தினசரி சூழலில் சிறப்பாக செயல்பட உதவுகிறது.

**செவித்திறன் பயிற்சியின் முக்கிய வழிமுறைகள்**




**கேட்டு உணர்தல்:** சத்தம் இருகின்றதா அல்லது இல்லையா என்பதை குறிப்பிடு.




**கேட்டு வேற்றுமை அறிதல்:** இரண்டு சத்தங்கள் ஒரு போல உள்ளதா அல்லது வேறுபட்டு உள்ளதா என்பதை குறிப்பிடு.




**கேட்டு கண்டறிதல்:** கூறுவதை கேட்டு அதன் பெயரை கூறு அல்லது அதனை காண்பி.